தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஐப்பசி 13, ஸ்ரீமுக — திருவள்ளுவர் ஆண்டு 2024

1993 அக்டோபர் 29, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை''

பொருளைத் திரட்டுவதற்கான வழிகளை வளர்த்து, அவற்றால் செல்வங்களைப் பெருக்கி, அவைகளுக்கு நேரும் இடையூறுகளையும் நீக்கி, அதன் பிறகே ஒருவர் வினையினை மேற்கொள்ள வேண்டும்.

1. இரங்கற் குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. பொ. ஏ. சீனிவா ரெட்டியார் அவர்கள் 25—5—1993 ஆம் நாளன்று மறைவுற்றச குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொது கிறேன். ள்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையி முன்னாள் உறுப்பினரான திரு. எம். பழனிமுத்து அவர்க 21—8—1993 அன்று மறைவுற்றது குறித்து இப்பேரவைக் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொ. ஏ. சீனிவாச ரெட்டியார் அவர்கள் 1977 ஆம் ஆண்டு முதல் 1980 ஆம் ஆண்டு வரையில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், குளித்தலை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றி உள்ளார்.

திரு. எம். பழனிமுத்து அவர்கள் திருச்சிராப்பள்ளி மாவட்டம், பெரம்பலூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1952 ஆம் ஆண்டு முதல் 1957 ஆம் ஆண்டு வரையில் செவ்வனே பணியாற்றி இருக்கிறார்.

மறைவுற்ற இப்பெரியவர்களை இழந்துவிட்ட அன்னார்களது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன். இயற்கை எய்திய இப்பெரியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள் - விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 61, திரு. இரா. அப்பு நடேசன், மாண்புமிகு நிதி அமைச்சர்.

61—

குலசேகரத்தில் கிளைக் கருவூலம்

*19474—திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டார் தொகுதியில் குலசேகரத்தில் ஒரு கிளைக் கருவூலம் அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதிஅமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருவட்டார் தொகுதியில் குலசேகரத்தில் கிளைக் கருவூலம் அமைக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை.

(ஆ) க்கேள்வி எழ இடமில்லை.